செ.வெ.எண்: 54/மே நாள் : 31.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் மேல்நிலைக்கல்வி பயில்வதற்கான உதவித் திட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளிகளில் பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியரை தமிழகத்தின் சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக்கல்வி பயில்வதற்கான உதவித் திட்டம்.

இராமாநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட / சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த 3 மாணவர்கள், 3 மாணவியர்கள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள், 2 மாணவியர்கள் ஆக மொத்தம் 10 மாணவ/மாணவியர் தொடர் படிப்பான +1 படிப்பினை தமிழகத்திலுள்ள தலைசிறந்த தனியார் மேல்நிலைப்பள்ளிகளில் சேர்ந்து பயில விரும்பும் பட்சத்தில் அப்பள்ளிகளில் சேர்ந்து பயில்வதற்கு அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உதவிபெறும் மாணவ/மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவருக்கு உயர்ந்த பட்சமாக ஆண்டொன்றிற்கு கீழ் கண்டவாறு ரூ.28,000/-க்கு மிகாமல் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| கல்விக் கட்டணம் | ரூ.8,000/- |
| பராமரிப்புக் கட்டணம் | ரூ.3,650/- |
| விடுதிக் கட்டணம் | ரூ.15,000/- |
| சிறப்பு பயிற்சிக் கட்டணம் | ரூ.1,500/- |
| மொத்தம் | ரூ.28,150/- (அ) ரூ.28,000/- (ஓராண்டிற்கு) |

தகுதியுடைய மாணவ,மாணவியர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**